

பெரம்பூர் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் ஆர்.டி.சேகர் நேற்று (11.4.2026) 35(அ) வட்டத்தில் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் வாக்கு சேகரித்தார்.



திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளர் கோவி. செழியனை ஆதரித்து வேங்கை வெங்கடேஷ், சுரேந்தர், பேராசிரியர் தீபக் (மாநில செயலாளர் கழக மாற்றுத்திறனாளிகள் அணி) ஆகியோர் வாக்கு சேகரித்தனர்.

### மூன்றாம் தரப் பேச்சாளரைப் போல பேசுவதா?

# எடப்பாடி நல்ல மனநல மருத்துவரைப் பார்க்க வேண்டும்!

## தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேட்டி!

**சென்னை, ஏப். 12–**

**மூன்றாம் தர பேச்சாளரைப் போல பேசும் எடப்பாடி நல்ல மனநல மருத்துவரை பார்க்க வேண்டும் என்று தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு கூறியுள்ளனர்.**

**சென்னை அண்ணா அறிவாலயத்தில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்பி, மருத்துவர் அணி தலைவர் டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு ஆகியோர் நேற்று அளித்த பேட்டி வருமாறு:**

எடப்பாடி பழனிசாமி, தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதியை மிகவும் தரக்குறைவான வார்த்தைகளால் பேசியிருக்கிறார்.

கடந்த ஒரு வார காலமாகவே அவருக்கு இது ஒரு பழக்கமாகிவிட்டதை நாம் பார்த்து வருகிறோம். முதலில், துணை முதல்வரை 'பால் டாயில்' என்று சொல்லி ஒரு வாரம் வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தார். அதற்கு இரண்டு நாட்களுக்கு முன் தி.மு.க. தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை கொரோனா காலத்தில் 'போய் சேர்ந்திருப்பார்' என்கிற மிகவும் இழிவான சொற்களைப் பயன்படுத்திப் பேசினார். நேற்று ஒரு பெண்ணின் மாண்பைக் கூடக் கருதாமல் மிகவும் தரக்குறைவான வார்த்தைகளில் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதியை தரம் தாழ்த்திப் பேசியிருக்கிறார்.

**தோல்வி பயத்தின் உச்சத்திற்கே சென்று விட்டார் எடப்பாடி!**

இதிலிருந்து எடப்பாடி பழனி





சாமி தோல்வி பயத்தின் உச்சத்திற்கே சென்றுவிட்டார் என்பது தான் தெரிகிறது. சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு இரண்டாவது இடம் கூட கிடைக்காது மூன்றாவது இடத்திற்குப் போய்விடுவோம் என்கிற பயத்தின் காரணமாக தரம் கெட்ட வார்த்தைகளை எடப்பாடி பழனிசாமி பேசுகிறார். இது அவருக்கு மட்டுமே பழக்கப்பட்ட விஷயம் கிடையாது. அவர் கட்சியைச் சார்ந்த சி.வி.சண்முகம் ஏற்கனவே பெண்களை இழிவாகப் பேசினார், இலவசமாக பொண்டாட்டிகளைக் கொடுப்பார்களா என்கிற அளவுக்கு தரம் தாழ்ந்து பேசினார்.

அதே மாதிரி திண்டுக்கல் சீனிவாசன் பாவாடை என்கிற வார்த்தையைப் பயன்படுத்திப் பேசினார். எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஒல்லியான பெண்களையும் குண்டான பெண்களையும் ஒப்பிட்டு உருவ;F கேலி செய்து பேசினார். தி.மு.க.வை சேர்ந்த அனைத்து மகளிரும் இப்படியான தரம்கெட்ட பேச்சுகளைக் கண்டிக்கிறோம். உருவக் கேலி செய்வது என்பது மிக தரம் தாழ்ந்த விஷயம். அரசியல் களத்தில் எதைப் பேச வேண்டும் என்பதற்கு ஒரு வரைமுறை இருக்கிறது.

உணர்ச்சிவசப்பட்டு எப்போதாவது ஓரிரு வார்த்தைகளைத் தவறாகப் பேசுவது இயல்பாக நடக்கக் கூடியதுதான் என்றாலும், அந்த தவற்றை உணர்ந்து மன்னிப்பு கேட்பதுதான் நாகரிகமான செயல். மணிப்பூர் கலவரத்தில் பெண்களை இழிவுபடுத்திய பா.ஜ.வுடன் கூட்டணி வைத்திருப்பதால்தான் இவருக்கும் இத்தகைய புத்தி வந்திருக்கிறது. என்.டி.ஏ கூட்டணியை நான் சென்ஸ் டெல்லி அலையன்ஸ் என்று தான் சொல்ல வேண்டும். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இதனை நோ டெவலப்மென்ட் அலையன்ஸ் என்றார்.

**நிச்சயமாக சட்டப்பூர்வ நடவடிக்கை எடுப்போம்!**

எடப்பாடி பழனிசாமி ஒரு நல்ல மனநல மருத்துவரை அணுகித் தன்னை பரிசோதித்துக் கொள்வது நல்லது. தனிமனித தாக்குதல், பெண்களை தரக்குறைவாகப் பேசுவது தொடர்பாக தேர்தல் ஆணையத்திடம் நாங்கள் புகார் அளிக்க தயாராக இருக்கிறோம். முன்னாள் முதல்வர் என்ற தகுதியை மறந்து மூன்றாம் தர பேச்சாளரைப் போல அவர் பேசுவதை வன்மையாகக் கண்டிக்கிறோம். நிச்சயமாக சட்டப்பூர்வ நடவடிக்கை எடுப்போம். துணை முதல்வரை பற்றி அவர் செல்லும் இடமெல்லாம் அவதூறாகப் பேசி வருகிறார்.

மரியாதை கொடுத்தால்தான் மரியாதை கிடைக்கும். பெண்களுக்கு எதிராகப் பேசுவது குறித்து மகளிர் ஆணையம் தானாக முன் வந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். கனிமொழி ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமல்ல; பெண்களின் உரிமைகளை முன்னெடுப்பவர். பா.ஜ.வுடன் கைகோர்த்துள்ள அ.தி.மு.க.வினர் பெண்களை இழிவுபடுத்துவதையே வழக்கமாக வைத்துள்ளனர்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

## மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் எம்.பி. தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்



### தலைமைக் கழக அறிவிப்பு

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 17.4.2026 | சென்னை கிழக்கு | துறைமுகம் |
| | சென்னை வடக்கு | பெரம்பூர் |
| | சென்னை கிழக்கு | கொளத்தூர் |
| | சென்னை கிழக்கு | வில்லிவாக்கம் |
| 18.4.2026 | சென்னை தென்மேற்கு | தியாகராயர் நகர் |
| | சென்னை தென்மேற்கு | மயிலாப்பூர் |
| | சென்னை மேற்கு | சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி |
| | சென்னை தெற்கு | வேளச்சேரி |
| 19.4.2026 | திருப்பூர் வடக்கு | அவினாசி |
| | கோவை மாநகர் | கோவை தெற்கு |
| 20.4.2026 | திருச்சி தெற்கு | திருச்சி கிழக்கு |
| | திருச்சி மத்திய | திருவரங்கம் |
| | திருச்சி மத்திய | இலால்குடி |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 11-04-2026.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

### கும்மிடிப்பூண்டி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர்

## டி.ஜெ.கோவிந்தராஜன் - பூண்டி கிழக்கு ஒன்றியத்தில் தீவிர வாக்கு சேகரிப்பு!

கும்மிடிப்பூண்டி, ஏப். 12-

கும்மிடிப்பூண்டி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் வாக்குச்சேகரிப்பு சுற்றுப்பயண விவரம் வருமாறு:

இன்று (12.04.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 8.30 மணி முதல் இரவு 9 மணி வரை கழக வேட்பாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் தீவிர வாக்கு சேகரிக்கிறார்.

**பூண்டி கிழக்கு ஒன்றியம்**

போந்தவாக்கம் - காலை 08:30 மணி, கச்சூர் - காலை 10:00 மணி, கலவை - காலை 10:45 மணி, வெலமகண்டிகை - காலை 11:30 மணி, நந்திமங்களம் - பிற்பகல் 12:15 மணி, மேலக்கரமனூர் - பிற்பகல் 12:45 மணி.

**ஊத்துக்கோட்டை பேரூர்**

வார்டு 1 & 2 - மாலை 05:00 மணி, வார்டு 3 & 4 - மாலை 06:00 மணி, வார்டு 5 & 6 - மாலை 06:30 மணி, வார்டு 7 & 8 - மாலை 07:00 மணி, வார்டு 9 & 10 - மாலை 07:30 மணி, வார்டு 11 & 12 - மாலை 8:00 மணி, வார்டு 13 & 14 - மாலை 08:30 மணி, வார்டு 15 - இரவு 09:00 மணி.

இவ்வாறு கும்மிடிப்பூண்டி தொகுதி தேர்தல் பணிக்குழு தெரிவித்துள்ளது.



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 147 வது வட்ட தி.மு.க. சார்பில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் காரம்பாக்கம் க.கணபதி வட்டத்தில் உள்ள அனைத்து தெருக்களிலும் வாக்கு சேகரித்தார். உடன் மண்டலக்குழுத் தலைவரும், பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், மாமன்ற உறுப்பினரும், கல்வி நிலைக்குழு உறுப்பினருமான ரமணி மாதவன், வட்டச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன், கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### பர்கூர் சட்டமன்றத் தொகுதி

## கழக வேட்பாளர் மதியழகன் கிராமம், கிராமமாக வாக்கு சேகரிப்பு!

பர்கூர், ஏப். 12-

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர், திமுக வேட்பாளர் மதியழகன் எம் எல்ஏ போட்டியிடுகிறார்.

அவர் பர்கூர் சட்டமன்றத் தொகுதி, நாகரசம்பட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட வேலம்பட்டி நாகரசம்பட்டி தட்டக்கல் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் வாக்காளர்களை சந்தித்து கடந்த ஐந்து ஆண்டுகளில் திராவிட மாடல் அரசியல் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை எடுத்துக் கூறியும், வருகிற திராவிட மாடல் 2.0 ஆட்சியில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் தலைமையில் அமையக்கூடிய 2.0 ஆட்சியில் செயல்படுத்த உள்ள திட்டங்களையும் வாக்காளர்களுக்கு எடுத்துக்கூறி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

இந்த பிரச்சாரத்தின் போது நாகரசம்பட்டி கிராமத்தில் போண்டா, வடை சுட்டு வியாபாரம் செய்து கொண்டிருக்கும் பெண்ணிடம் வாக்கு சேகரித்த அவர் அந்த கடையில் அமர்ந்து போண்டா, வடை சுட்டு மக்களுக்கு வழங்கினார். ஒரு சட்டமன்ற உறுப்பினர் வேட்பாளர் ஒரு சிறிய கிராமத்தில் போண்டா, வடை சுட்டு மக்களுக்கு வழங்கியது கண்டு அந்த பகுதியில் மக்கள் மிகவும் ஆச்சரியமடைந்தனர்.

இந்த பிரச்சாரத்தின் போது மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், பேரூர் கழக செயலாளர் தம்பிதுரை, பேரூராட்சி துணைத் தலைவர் குமார் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் அவர்களை ஆதரித்து ஜோன்ஸ் சாலை, தஸ்தகீர் சாஹிப் ஜாமியா மஸ்ஜித் பள்ளிவாசலில் தலைமை செயற்குழு உறுப்பினரும் பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் சைதை மு.மகேஷ்குமார் கழகத்தினர் மற்றும் தோழமை கட்சியினருடன் 'உதயசூரியன்' சின்னத்தில் வாக்கு சேகரித்தார். இந்நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பன், வட்ட செயலாளர் ஆ.வரதன், மு.பாக்கியலட்சுமி, ஏ.மஜித் உள்ளிட்ட கழகத்தினர், தோழமை கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.



களத்தில் இளைஞர் அணி சார்பில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி தி.மு.கழக வெற்றி வேட்பாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களை ஆதரித்து 142 (அ) வட்டத்திற்குட்பட்ட பாகம் 134, 135, 151ல் சேஷாச்சலம் முதலி தெரு, பாலாஜிசிங் தெரு, பிள்ளையார் கோவில் தெரு, கே.பி.கார்டன் 1வது, 2வது தெரு, ஜீனிஸ் சாலை, தர்மராஜா கோயில் தெரு, ஆகிய தெருக்களில் பாக முகவர்கள் தீ.ராஜ்குமார், சி.பி.ராமபிரபு, சுதாகர் முன்னிலையில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளரும், பாக பொறுப்பாளருமான, ஆர்.கிருஷ்ணகுமார் வீடு வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் பரத்குமார், தினேஷ்வரன், சச்சின் திலீப், சஞ்சய், குகன், வினோத், சைலேஷ், அறிவுமதி, தமிழன்பன் உள்ளிட்ட தோழமை கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### பெரம்பலூர் - ஆலத்தூர் மேற்கில் - தொகுதிப் பார்வையாளர்

## தங்க.சித்தார்த்தன் - உதயசூரியனுக்கு வாக்கு சேகரிப்பு!

பெரம்பலூர், ஏப். 12-

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் மேற்கு ஒன்றியத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் கேட்டு தீவிர பிரச்சாரம் செய்தார்.

பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன்

ஆலத்தூர் மேற்கு ஒன்றியத்தில் நாரணமங்கலம், விஜயகோபாலபுரம், மருதடி,

ஆலத்தூர், இரூர், பாடாலூர், திருவளக்குறிச்சி, நாட்டார்மங்கலம், கூத்தனூர்,

செட்டிக்குளம், மாவிலங்கை உள்ளிட்ட கிராமங்களில் தி.மு.க.வினர் மற்றும் பொதுமக்களை சந்தித்து, தி.மு.க.அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் கேட்டு இன்று திண்ணைப்பிரச்சாரம் செய்தார். இந்நிகழ்ச்சியில் ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ. வல்லபன் உள்ளிட்ட தி.மு.க.வினர் மற்றும் கழகத் தோழர்களும் ஒன்றினைந்து வாக்குகள் சேகரிப்பில் ஈடுபட்டனர்.



தமிழ்நாடு முதல்வர் நல்லாட்சி மக்கள் போற்றும் நல்லாட்சி மீண்டும் மலர உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வித்தியாசத்தில் வெற்றி பெற வேண்டும் என்று 153 வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ராமலிங்கம் தலைமையில் வாக்கு சேகரித்தனர்.